*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2025** **02 அக்டோபர் 2025**

**பத்திரிகை செய்தி**

புதுச்சேரி அரசு, உள்ளாட்சித் துறை சார்பில், தூய்மையே சேவை 2025 மற்றும் தூய்மை திருவிழாவின் நிறைவு நிகழ்ச்சி பெருந்தலைவர் காமராசர் மணிமண்டபத்தில் இன்று (02.10.2025) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தூய்மை சேவையில் சிறப்பாக பணியாற்றிய நிறுவனங்கள், மாணவர்கள், தன்னார்வலர்கள், துப்புரவு பணியாளர்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியோருக்கு பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்.

நிகழ்ச்சியில், மாண்புமிகு முதலமைச்சர் திரு ந. ரங்கசாமி, சட்டப்பேரவை தலைவர் திரு R. செல்வம், மாநிலங்களவை உறுப்பினர் திரு S.செல்வகணபதி, தலைமைச் செயலர் திரு சரத் சௌகான், உள்ளாட்சித்துறை செயலர் திரு கேசவன், இயக்குனர் திரு சக்திவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, சுவச் பாரத் தினத்தை ஒட்டி இருசக்கர வாகன - விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, தூய்மை இந்தியா தின கையெழுத்து இயக்கம் மற்றும் பல் மருத்துவ இயக்கத்திற்கான முகாமினையும் தொடங்கி வைத்தார்.